## இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகம் -2012

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 சனவரி 19 ஆந் திகதிய பிஈடி/54 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிகாரம் நிறுவகம் அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறயைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன..

(ஆ) 2008 இல் இணைக்கப்பட்ட உத்தியோகத்தர் தொடர்பில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றின் பங்களிப்புக்கான ஏற்பாடு முறையே ரூபா 10,200 மற்றும் ரூபா 68,000 தொகை கணக்குகளில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்குகளில் காட்டப்பட்ட ரூபா 36,800 தொகையான உத்தியோகத்தர் கடன்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்படாமல் உத்தியோகத்தர் கடன் கணக்குகளிற்கு எதிராக ஊழியர் சேமலாப நிதியத்திற்கான நிலுவை

பங்களிப்புகளை சரிசெய்தல் காரணமாக ரூபா 27,200 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) ரூபா 104,432 தொகையான இறுதி இருப்புக்கள் தவாறான இறுதியிருப்பு பெறுமதியிடல் காரணமாக ரூபா 52,216 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. ஆவதால், ஆண்டிற்கான நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் இலாபங்கள் அதேதொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

ரூபா 383,960 மற்றும் ரூபா 66,000 பெறுமதியான முறையே இறுதி இருப்புககள் மற்றும் உத்தியோகத்தர் கடன்கள் என்பன உரிய பதிவேடுகள், இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள், கடன் விண்ணப்பங்கள் போன்ற காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்யவோ அல்லது மெய்மையாய்வு செய்யவே முடியாதிருற்தது.

## 1.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | தேசிய அரச பேரவையின் 1975 இன் 33 ஆம் இலக்க மதிப்பீட்டாளர் நிறுவக அதிகாரச்சட்டத்தின் ஏ(5)(2) ஆம் பட்டோலை | கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர்களுடைய உறுப்புரிமைக் கட்டணங்களை செலுத்தியிருக்காத 07 உறுப்பினர்களின் உறுப்புரிமை இரத்து செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் தொழிற்பாடுகளை முன்னைய ஆண்டிலுள்ள ரூபா 378,302 ஆன நேரொத்த மிகையுடன்

ஒப்பிடும் போது ரூபா 347,662 ஆன மிகையில் விளைவித்திருந்தது, ஆதலால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானத்தை விஞ்சிய செலவின அதிபரிப்பு காரணமாக ரூபா 30,640 ஆல் நிதிசார் விளைவுகளால் குறைவைக் காட்டுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 செப்தெம்பர் 24 இல் நடைபெற்ற சபைக் கூட்டத்தின் பிரகாரம் சபையானது வங்கியில் இடம்பெற்ற நிலையான வைப்பொன்றிற்கு அறநெறி நிதியத்தின் நடைமுறைக் கணக்கலிருந்து ரூபா 250,000 தொகை மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இத்த தீர்மானத்தை அமுலாக்குவதற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) போதியளவு செயற்படுத்தப்பட்டிருக்காத பிரதான குறிக்கேள்கள்

தேசிய அரச பேரவையின் 1975 இன் 33 ஆம் இலக்க மதிப்பீட்டாளர் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடவாறு பின்வரும் பிரதான குறிக்கோள்களை அடைவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

i. நுலகங்கள் தாபித்தல் மற்றும் பராமரிப்தல் மூலம் விஞ்ஞான மதிப்பீட்டுடன் தெடர்புபட்டிருக்கின்ற அல்லது தொடர்புபட்டிருக்காத அறிவின் சுவீகரிப்பு, பரப்புதல் மற்றும் உள்ளக மாற்றம் என்பவற்றை மேம்படுத்தல்.

ii. நிறுவத்தின் உறுப்புரிமைக்கான தகமையுடைய பரீட்சைகளை நடாத்துதலும் நடாத்துவதற்காக வழங்குதலும் மற்றும் அத்தகைய பரீட்சைகளிற்காக கற்கை பாடநெறிகளை வழங்கல் அல்லது அனுமதித்தல் மற்றும் விரிவுரையாளர்கள் மற்றும் பரீட்கசர்களை வேலைக்கமர்த்துவதும் வேதனம் வழங்கலும்.

iii. புலமைப்பரிசில்கள், கண்காட்சிகள், உதவிப்பணங்கள் மற்றும் பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் வழங்குவதற்கு.

iv. இலங்கையில் மதிப்பீட்டு தொழிலிலுள்ளோரின் நலன் அல்லது மேம்பாட்டிற்காக கட்டாயமாக இருக்கவேண்டிய தரவு வங்கிகளின் தாபிப்பு மற்றும் பராமரிப்பு உள்ளடங்கலாக அத்தகைய ஏனைய அளவீடுகளை எடுப்பதற்கு.

v. 2010 திசெம்பர் 06 இல் நடைபெற்ற சபைக் கூட்டத்தின் பிரகாரம், (15 ஆவது அமர்வின் 1 ஆவது கூட்டம்) மூன்று மாதங்களிற்கு ஒருதடவை கருத்தரங்குகள் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இருந்த போதிலும், நிறுவகம், 2012 ஆம் ஆண்டிற்காக ஒரு கருத்தரங்கினை மாத்திரமே நடாத்தியிருந்தது.

## 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகக்பயன்படுத்திய சொத்துக்கள்

ரூபா 71,190 மற்றும் ரூபா 186,830 தொகையான அசையாத மற்றும் மெதுவாக நகரும் விடயங்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்குள் நிதிக்கூற்றகளானது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2014 சனவரி 29 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கை மூலம் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு.
(ஆ) உறுப்புரிமைக்கட்ட சேகரிப்பு
(இ) நிதி முகாமைத்துவம்.
(ஈ) நிலையான சொத்து மீதான கட்டுப்பாடு
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு